# காவல் உதவி ஆய்வாளர் தேர்வுக்கு சிறப்பு பயிற்சி



வேலூரில் பயிற்சி முகாமை தொடக்கி வைத்துப் பேசிய வேலூர் சரக டி.ஐ.ஜி. ஆனிவிஜயா.

**வேலூர், மே 22:** காவல் உதவி ஆய்வாளர் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி முகாம் வேலூரில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது. பயிற்சியை டி.ஐ.ஜி. ஐ.ஆனிவிஜயா தொடக்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் காலியாக உள்ள 1,444 காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு வருகிற ஜூன் 25-ஆம் தேதி நடைபெற உள்ளது. வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களிலிருந்து இந்த தேர்வுக்குத் தயாராகும் காவலர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் வேலூர் கோட்டை சுற்றுச் சாலையிலுள்ள காவலர் நல்வாழ்வு மன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

இந்த பயிற்சி முகாமை வேலூர் சரக காவல் துணைத் தலைவர் ஐ.ஆனிவிஜயா தொடக்கி வைத்து தேர்வுக்கு ஆயத்தமாகி வரும் காவலர்களிடம் தேர்வை எப்படி எதிர் கொள்வது என்பது குறித்து விளக்கிக் கூறினார். தேர்வு எழுதுவதற்கான நுணுக்கங்கள் குறித்து பயிற்சியாளர்கள் மூலம் காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமில் 500-க்கும் மேற்பட்ட காவலர்கள் பங்கேற்று பயிற்சி பெறுகின்றனர். பின்னர், டி.ஐ.ஜி. ஆனிவிஜயா கூறியது: காவல் உதவி ஆய்வாளர் தேர்வுக்கு வேலூர் சரகத்தில் 1,200-க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர். இதற்கு விண்ணப்பித்துள்ள காவலர்களுக்கு தேர்வை எதிர்கொள்வது குறித்து ஊக்கம் அளிக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.

முகாமில் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஷ்கண்ணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.